T. 7099

# தண்டபாணி சுவாமிகள் அருளிய
# திருவாமாத்தூர்ச் சதகப் பதிகம்

பதிப்பு

**மா. பூங்குமரி**

நெறியாளர்

**முனைவர் வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

**தமிழ் இலக்கியத் துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

மே - 2006

தண்டபாணி சுவாமிகள் அருளிய

# திருவாமாத்தூர்ச் சதகப் பதிகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல்
பட்டயப்பேற்றிற்காகச் சென்னைப்
பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்படும் பதிப்பேடு


பதிப்பு

மா. பூங்குமரி

நெறியாளர்

முனைவர் வீ. அரசு

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்



தமிழ் இலக்கியத் துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005

மே - 2006

*‘சுவடியியல் மற்றும் பதிப்பியல்’* பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும்
பதிப்பேட்டு எண் : 43010515

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு.**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப்பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.

தண்டபாணி சுவாமிகள் அருளிய **'திருவாமாத்தூர்ச் சதகப் பதிகம்'** என்னும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** என்னும் பட்டயம் பெறுவதற்காகச் செல்வி **மா. பூங்குமரி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பு செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனிமுயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கின்றேன்.

நெறியாளர்

**(முனைவர் வீ. அரசு)**

இடம் : சென்னை 5
நாள் :

## பதிப்பு மாணவர் உறுதிமொழி

**மா. பூங்குமரி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் இலக்கியத்துறை*
*சென்னைப்பல்கலைக்கழகம்*
*சென்னை 600 005.*

**'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் தண்டபாணி சுவாமிகள் அருளிய **'திருவாமாத்தூர்ச் சதகப்பதிகம்'** எனும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கின்றேன்.

பதிப்பு மாணவர்

**(மா. பூங்குமரி)**

*இடம் : சென்னை 5*
*நாள் :*

# உள்ளடக்கம்


1. நன்றியுரை
2. பதிப்புரை
3. திருவாமாத்தூர்ச் சதகப் பதிகம்
   - ஐந்தாவது சதகம் 27-55
4. பின்னிணைப்பு
   - சொல்லடைவு 56-65
   - முதற்குறிப்பு 66-71
   - அருஞ்சொற்பொருள் 72-75
   - தமிழில் வெளிவந்துள்ள சதக இலக்கியங்கள் 76-86
   - பார்வை நூல்கள் 87

# தண்டபாணி சுவாமிகளின்
# படம்



# நன்றியுரை

"பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கொண்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்" என்று திரு.வி.க அவர்களால் பாராட்டப் பெற்ற அந்த மூதறிஞர்களின் பாதையில் ஒருமுறையேனும் நாங்கள் பயணிப்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வாய்ப்பளித்த தமிழ் இலக்கியத் துறைத்தலைவரும், சுவடி நூலாக்கத்தின் போது தகுந்த ஆலோசனைகளை வழங்கி நெறிப் படுத்திய நெறியாளருமான பேராசிரியர் முனைவர் வீ.அரசு ஐயா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இச்சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயவகுப்பில் நான் சேர்ந்து பயில வாய்ப்பளித்தும், அவ்வப்போது ஊக்கப்படுத்தியும், தேவைப்பட்ட நூல்களை வழங்கியும் உதவிய முனைவர் ய.மணிகண்டன் ஐயா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவடிப்பதிப்பிற்கெனச் சுவடிகளை அளித்தும், பதிப்பைச் செம்மையுறச் செய்தும், பதிப்பின்போது ஏற்பட்ட ஐயங்களை மிகுந்த அக்கறையுடனும், பொறுமையுடனும் விளக்கிய புலவர் ப.வெ. நாகராஜன் ஐயா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வகை உதவியாயினும், தயங்காமல் மனமுவந்து செய்து தொடர்ந்து என்னை ஊக்கப்படுத்தி வரும் தோழர்கள் நா. மோகன்குமார், வி. அருள், பா.ஜெய்கணேஷ், அ.சதீஷ், தோழியர் ம. மகாலட்சுமி, சு. மகேஸ்வரி, ச. பாரதி ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நூலுக்குச் சிறந்த முறையில் உரிய வடிவம் கொடுத்த இராசேந்திரன், மற்றும் பேபி இராசேந்திரன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பதிப்புரை

தன்னலம் கருதாது தமிழ்நலம் மட்டுமே கருதி, பதிப்புச் சிக்கல்களோடு, பொருளாதாரச் சிக்கல்களோடும் போராடி, ஏட்டுக்கடலில் மூழ்கி இலக்கிய முத்தெடுத்ததன் வாயிலாகவே நாம் சுவடிகளில் மறைந்துகிடந்த பழந்தமிழ் மக்களின் எண்ணங்களை, சிந்தனையை, அறிவை, ஆற்றலை, பழக்கவழக்கங்களை, வாழ்வியலை, வீர உணர்வை இனம் காண முடிந்தது.

அந்த வகையில் தமிழனின் அடையாளத்தை, மொழியின் மேன்மையை உலக அரங்கிற்குக் கொண்டு சென்று, தமிழுக்கு முகம் கொடுத்த அந்தப் பதிப்பு முன்னோடிகளை அடியொற்றியே சுவடியியல் என்னும் களம் தனித்த கவனம் பெற்று இதுகாறும் இலக்கியப் பதிப்புகள், இலக்கணப் பதிப்புகள், நாடகப் பதிப்புகள், காப்பியப் பதிப்புகள் போன்ற பல்வகைப் பதிப்புகள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அதன் தொடர்ச்சியாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின்

திருவாமாத்தூர்ச் சதகம் இங்கு பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## ஆசிரியர் வரலாறு

தண்டபாணி சுவாமிகள் திருநெல்வேலியில் 22-11-1839 அன்று பிறந்தார். தந்தையார் செந்தில்நாயகம் பிள்ளை. தாயார் பேச்சிமுத்தம்மை. பெற்றோர்களால் இவருக்கு இட்ட பெயர் சங்கரலிங்கம் என்பதாகும்.

இவர் தம் ஒன்பதாம் அகவையிலேயே பூமிகாத்தாள் என்ற அம்மனை பற்றி வெண்பாவை இயற்றினார். தொடர்ந்து ஐம்பது ஆண்டு காலத்தில் நூறாயிரம் வெண்பாக்களை இயற்றியுள்ளார். இவர் மொத்தம் பன்னிரண்டு வண்ணங்களையும், எண்ணற்ற திருப்புகழ் பாக்களையும் இயற்றியுள்ளார்.

இவர் இளமை முதல் வேற்பூசை செய்து முருகனருளால் தமிழ்க்கவிகள் பாடும் தன்மை வாய்ந்து பலநூல்கள் அருளி, பல தலவழிபாடு செய்து, செல்லுமிடம் எங்கனும் சீவ கருணை நெறி வளர்த்து இறுதியில் நடுநாட்டுச் சிவதலமான திருவாமாத்தூரில் எல்லை தாண்டா விரதமும் தவமும் புரிந்து 5-7-1898 இல் அருட்சமாதி கொண்டார்.

திருசெந்தில் கோவை, கௌமார விஜயம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், கலம்பகம் திருவந்தாதி, திருமாலந்தாதி, தில்லைத் திருவாயிரம், புலவர் புராணம், அருணகிரிநாதர் புராணம், குருபரதத்துவம், நெல்லைக்கலம்பகம், முருகப்பெருமான் பைந்தமிழ்த்திரட்டு, ஸ்ரீ சண்முகநாதப்பெருமான் பிரபந்தத்திரட்டு போன்றவை தண்டபாணி சுவாமிகளின் குறிப்பிடத்தகுந்த நூல்களாகும்.

## திருவாமாத்தூர் தலவரலாறு

தெய்வங்களுள் சிவபெருமான் சிறந்து விளங்கு வதைப்போலவும், பாவினங்களுள் வண்ணப்பாட்டு சிறந்து விளங்குவதைப்போலவும், நன்னெறிகளுள் கொல்லா விரத நெறி சிறந்து விளங்குவதைப் போலவும், ஊர்களுள் இத்திருவாமாத்தூர் சிறந்து விளங்குகிறது என்று தலபுராணம் சிறப்பித்துக்கூறுகிறது.

சிவபெருமான் விரும்பி உறையும் பதியாகிய திருவாமாத்தூருக்கு அண்டையிற்செல்லும் புண்ணிய நதியாகிய பம்பையாறு, பாம்பையும், மானையும், கொன்றையையும், வில்வத்தையும் கொண்டு செல்வதால் சிவபெருமானைப் போன்றதாகும் எனப்புகழப்படுகிறது.

தேன் துளித்தால் ஒத்த சொற்கிழத்தியாகிய கலை மகள் நாதன் நான்முகனும், மான்போலும் விழியினை

யுடைய மலர் மகள் கொழுநன் திருமாலும், ஊன்றும் மூவின சூலந்தாங்கிய உமையம்மையின் கேள்வன் சிவபிரானும் என்னும் மூவரும் ஒன்றான வடிவமே திருவாமாத்தூர் இறைவனின் வடிவமாகும்.

இவ்வூருக்கு எழுமுனிவர் பூசித்தது, ஆனை முகக் கடவுள் வழிபட்டது, நாரதர் வழிபட்டது, மதங்கனி முதலோர் வழிபட்டது, நான்முகன் வழிபட்டது, பன்னிரண்டு கதிரவர்கள் வழிபட்டது அட்டவசுக்கள் வழிபட்டது. இராமபிரான் வழிபட்டது போன்ற சிறப்புகள் உள்ளன எனக் கூறப்படுகிறது.

இவ்வூர் விழுப்புரம் இரயில்வே நிலையத்திற்கு வடமேற்குத் திசையில், நான்கு மைல் தொலைவில் பம்பை என்னும் ஒரு சிற்றாற்றின் வட கரையில் அமைந்துள்ளது.

இக்கோவிலில் உள்ள அம்மையை "முத்தார் நகையுடைய அழகுடையாள்" என்பர். ஊரின் ஒருபுறம் தண்டபாணி சுவாமிகளின் சமாதி இருக்கிறது.

## திருவாமாத்தூர்க் கலம்பகம்

'மாறாத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி யாமாத்தூ ரம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே.

குராம னுக்ககுழ ழாளொரு கூறனார்
அராம னுஞ்சடை யான்திரு வாமாத்தூர்
இராம னும்வழி பாடுசெ யீசனை
நிராம யன்றனை நாளு நினைமினே

என இரட்டைப் புலவர்கள் திருவாமூத்தூரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள்.

**சதக இலக்கியத்தின் தோற்றமும் தொடர்ச்சியும் :**

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. மக்களின் விருப்பங்களை, தேவையை பூர்த்தி செய்யும் வகையிலேயே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. மக்களை, சமூகத்தைப் புறக்கணிக்கிற இலக்கியங்கள் காலத்தை வென்று நிற்பதில்லை. அந்த வகையில், சதக இலக்கியங்களின் பாடுபொருள்களும் காலத்திற் கேற்றவாறு மாறுபட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது.

சதக இலக்கியத்தின் தோற்றம்:

சதகமென்பது ஒரு பொருள் பற்றி எழுந்த நூறுபாக்களை உடையது. சதகத்தைப்பற்றி பழைய இலக்கண நூல்களில் கூறப்படவில்லை. பிற்காலத்து ஐந்திலக்கணம் கூறும் செந்தமிழ் நூலாகிய

இலக்கண விளக்கப்பாட்டியலில் 'விழையுமொரு பொருண் மேலொரு தழையவுரைத்தல் சதகமென்ப என்று இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

இதற்கு உரையெழுதிய ஆறுமுக நாவலர் 'கற்று வல்லோரால் விரும்பும்அகப்பொருளொன்றின் மேலாதல், புறப்பொருளொன்றின் மேலாதல் கற்பித்து நூறு கவி பாடுதல் சதகமாம் என்று பொருள் கண்டார்' என்றுநடராஜ சதகத்தில் கூறப்பட்டுள்ளது

இச்சதகத்தின் தந்தையாராக முதற்கண் விளங்குபவர் மாணிக்கவாசகர் ஆவார். தனி நூலாக செய்யாவிடினும், திருவாசகத்து திருச்சதகம் என்ற பகுப்பு அமைந்திருத்தல் ஆராயத்தக்கது என்கிறார் தண்டபாணி தேசிகர்.

ஆனால், சதகம் என்ற பெயரிலும் எண்ணிக்கை யிலும், மட்டுமே ஒற்றுமை உண்டு என்றும், திருச்சதகத் தில் பத்துப்பிரிவுகளாக பகுப்பு முறை உள்ளது. வெவ்வேறு யாப்பில் பாடப்பட்டுள்ளது. இவையும், திருச்சதகத்தின் அந்தாதி அமைப்பும் வேறு சதக இலக்கியங்களில் காணப்படவில்லை என்றும் திருச்சதகம் பிற சதகங்களிலிருந்து வேறுபடுவதாக டாக்டர் பழனிஅம்மாள் தமது நூலில் குறிப்பிடுகிறார்.

எனவே, சதகம் என்ற சொல் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றியது என்றாலும் சதகத்தின் அடிப்படைக்கூறுகள் பதினோறாம் நூற்றாண்டிலேயே வளர்ச்சி அடைந்தது எனலாம்.

சங்க இலக்கியத்துக்குப்பின் தமிழகத்தில் பக்தி காலம் தோன்றியது. சமயப்புலவர்கள் பலர், இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களைச் சிறப்பித்து திருவாரூர் புராணம், தணிகை புராணம் என்று பாடினர். இவ்வாறு நாடுகளையும், நகரங்களையும், சிறப்பித்துப்பாடும் மரபைப் பின்பற்றி ஆறைகிழார் என்பவர், தாம் வாழ்ந்த மண்டலத்தைச் சிறப்பித்து கார்மண்டலத்தைப் பாடினார். இதில் கார் மண்டலத்தில் வாழ்ந்த புலவர்கள், அறிஞர்கள், வள்ளல்கள், ஞானியர்கள் ஆகியோரது வரலாறு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. சதகம் என்ற நூல் இப்படித்தான் அமைய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியவர் ஆறைக்கிழார் ஆவார்.

## சதக இலக்கியத்தின் வளர்ச்சி

முதலில் தோன்றிய காரர்மண்டல சதகத்துக்குப் பின், தொண்டை மண்டல சதகம், சோழ மண்டல சதகம், ஈழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் போன்ற சதகங்கள் தோன்றியுள்ளன.

மண்டல சதக பெருக்கத்துக்குப்பின், நீதி கருத்துக் களைப் பாடுபொருளாகக்கொண்டு இயற்றலாம் எனத் தண்டலையார் சதகத்தைப் படிக்காசுப் புலவர் பாடினார். இதனை அடிப்படையாகக்கொண்டு அறப்பளீசுரச்சதகம், குமரேச சதகம் போன்ற நீதி சதக இலக்கியங்கள் தோன்றின.

பின்பு, மக்களிடையே பக்தி உணர்வு அதிகரித்தது. அதனால், இறைவன் பெருமைகளை உள்ளடக்கிய துதிச்சதகங்கள் 19 ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டன. நடராச சதகம், தில்லை நடராச சதகம், சிவகுரு சதகம், எம்பிரான் சதகம் போன்ற சதகங்கள் பாடப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு சதக இலக்கியங்கள் தோன்றின. மகாபாரதக் கதைகள் சுருக்கமாக ஸ்ரீமந்த நடராஜ மகாபாரதசதகம் என்றும், பெரிய புராணக்கதைகளின் சுருக்கம், திருத்தொண்டர் சதகம் எனவும் பாடப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டுக்குப் பின், எந்த கருப்பொருளைக் கொண்டு பாடினாலும் நூறு பாடல்கள் என்றவரையறை மட்டும் நிலைத்து விட்டது.

சதக இலக்கியத்தின் பகுப்பு முறை

சதக இலக்கியங்கள் பெரும்பாலும் 1. மண்டல சதகம், 2. நீதிச் சதகம், 3. துதிச்சதகம், 4. காப்பியச்சதகம் என்ற பெரும்பிரிவில் அடங்கும்.

சுவடி அமைப்பு

திருவாமாத்தூர்ச் சதகப்பதிகம் என்னும் இந்நூலின் சுவடி சிரவை ஆதீனத்திலிருந்து, புலவர் பா.வெ. நாகராஜன் ஐயா அவர்கள் மூலம் பெறப்பட்டது.

பத்துச் சதகங்களைக் கொண்ட இச்சுவடியில் ஐந்தாவது சதகம் மட்டும் பதிப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. ஓலைச்சுவடியின் நீளம் 44.செ.மீ. அகலம் 3.5 செ.மீ. சுவடியின் இரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளன. ஒரு பக்கத்திற்கு ஒன்பது அல்லது பத்து அடிகள் வரை கொண்டது. ஒவ்வொரு பாடலுக்கும் இறுதியில் பாடல் எண் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளது. சுவடியின் எழுத்து அமைப்பு இடைவெளியின்றி தொடர்ச்சியாக அமைந்துள்ளது.

**திருவாமாத்தூர்ச் சதகப்பதிகத்தின் சிறப்புகள்**

திருவாமாத்தூர்ச் சதகம் , அதன் பகுப்புகளில் ஒன்றான துதிச்சதகம் என்ற வகையைச் சார்ந்தது. இறைவனிடம் இந்த பூமியில் மீண்டும் பிறவா நிலை வேண்டும் என்று இரங்கி வேண்டுவதும், இறைவனின் பெருமைகளைப் பாடுவதும் துதிச்சதகத்தின் இயல்பாகும்

பொதுவாக புலவர்கள் இறையருள் வேண்டும் தன்மை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை, 1. இழிநிலை கூறி அருள் வேண்டல், 2. பக்தி நிலை கூறி அருள் வேண்டல், 3. இடர்ப்பாடுகள் கூறி அருள் வேண்டல் 4. நிலையாமை கூறி அருள் வேண்டல் ஆகும்.

திருவாமாத்தூர் சதகத்தில் இந்நான்கு நிலையிலுமே இறையருள் வேண்டிய நிலை காணப்படுகிறது. இறைவனிடம் தன்னை இழித்தும், பழித்தும் கூறி ஆட்கொள்ளவேண்டுதலே இச்சதகத்தின் கருப்பொருளாகும். சான்றாக,

"சரதம் ஆக நானு னாது
தாள்க ளைக்கு றித்துளேன்;
விரத பங்கம் வந்தி டாது
வேண்டி என்னை ஆட்கொள்வாய்..."

"சங்கை இன்றித் தராதவர் பாலும்உற்று
அங்கை ஏற்றலை யாதெனை யாட்கொள்வாய் ..."

"தீர்க்க யோசனை இன்றித் தியங்கும்என்
மூர்க்க வெம்பகை முற்றொழித் தாட்கொள்வா..."

"சாக்காடொடு பிறப்பும் தவிர்க்கின்றமெய் முத்தி
வாக்கால்அரு ளிடவும் வல்லாய்எனை எள்ளேல்..."

இறை நிலை அடைதலே நிறை நிலை என்ற பக்தி நிலை பாடல்களில்வெளிப்படுகிறது.

பாடல் வழி வெளிப்படும் மாதையூரின் சிறப்பு

"பானல் வாவி மாதை யம்பதிக்கண் உற்ற"

"திருமாதையூரின் தேசிகா"
"கவின் மாதையின் காவல் செய்வா"
"தமிழ் மாதை வாழும் நாயகமே"
"மஞ்சறாப் பொழின் மாதை"
"தென்னையும் பூகமும் செறியும் மாதை"
"பன்னரும் வளம் பல படரும் மாதை"
"புண்டரீகத் தடம் பொலியும் மாதை"
"கோங்கும் செருந்தியும் பொற்கொன்றை முதலியவும் ஓங்குந் திரு மாதை"
"வண்டார் பொழில் மாதை"
"அன்னம் பயில்வயன் மாதை"
"செல்லுலாம் பொழில் மாதை"
"கன்னல் வார் வயல் சூழ்கவின் மாதை"

என்ற வரிகளின் மூலம் மாதையூரின் அழகை மனங்கொளத்தக்க வகையில் ஆசிரியர் வருணித்துள்ளார்.

**மகுடச்சிறப்பு**

மகுடம் என்பது செய்யுளின் இறுதி அமைப்பைக்குறிக்கும் சொல்லாகும். சான்றாக, எம்பிரான் சதகத்தில் "எம்பிரானே" என்ற மகுடம் காணப்படுகிறது.

இந்த நூலில், சுரேசனே, மூர்த்தியே, பித்தனே, பெரியனே, நாதனே, நண்பனே, பரமனே, சித்தனே, நித்தனே, ஆதியே, பிரானே,பெருமானே, தேவே,

தூயவனே என்று ஒற்றைச்சொல்லில் மகுடம் அமைக்கப்பட்டுள்ளது.

## யாப்பமைதி

சதக இலக்கியங்களில் காணப்படும் பாடல்கள் ஒரே யாப்பில் பாடப்பட வேண்டும் என்பது மரபு. எனினும், இந்நூலில் பத்துப்பாடல்களுக்கு ஒரு யாப்பு எனப்பிரித்து நூறுபாடல்களும் வெவ்வேறு யாப்பில் பாடப்பட்டுள்ளன. முதல் பத்துப்பாடல்கள் எழுசீர் சந்த விருத்தம் என்னும் யாப்பிலும், இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து கலித்துறை என்னும் யாப்பிலும், ஐந்தாம் பத்து, ஆறாம் பத்து சந்தக் கலிவிருத்தம் என்னும் யாப்பிலும், ஏழாம் பத்து, எட்டாம் பத்து கலிச்சந்த விருத்தம் என்னும் யாப்பிலும், ஒன்பதாம் பத்து பலவகை கலிவிருத்தங்களைப்பெற்றும், இறுதிப்பத்து கலிவிருத்தம் என்னும் யாப்பிலும் புனையப்பட்டுள்ளன.

# திருவாமாத்தூர்ச் சதகப் பதிகம்

## பாயிரம்

### (நேரிசை வெண்பா)

உதகச் சடைப்பெருமான் ஓங்கெழில்ஆ மாத்தூர்ச்
சதகப் பதிகம்அன்பிற் சாற்ற - மதகயப்பூஞ்
சென்னியுறு முன்னவனும் செங்கைவடி வேற்குகனும்
என்னிதயத் துள்வசிப்பா ரே. (1)

### (கட்டளைக் கலித்துறை)

கவளக் கரிமலி சீர்மாதை மாநகர்க் காவல்செய்யும்
பவளக் கடவுள் அணியும் சதகப் பதிகத்துக்குத்
தவளக் கலைமக ளும்,தொண்டர் தாள்மலர்த் தாள்துகளும்
சுவளக் கவிதந் தநுபூதி காட்டும் துணைத்துணையே. (2)

### (எழுசீர் விருத்தம்)

மாயிரும் புவியில் சதுரர்ஆ தியர்தம்
வாயுரைப் படிசெய்நீ வஞ்சப்
பேயினும் கொடியார் பகைமிகப் பெறுநான்
பேதுறக் காண்பதோர் பிழையே;

சேயினில் திகழ்சீர் தரின்அலால் அமையேன்;
   செம்பொனும் தமிழும்ஆ தியவாம்
ஆயிரம் வளமை அமையும்ஆ மாத்தூர்
   ஆண்டநா யகன்திரு வருளே (3)

## (எண்சீர் விருத்தம்)

நாடோறும் பசுக்கள்பல் கொடியோர் தம்மால்
   நலிவடைதல் அறமாற்றும் நலமே வேட்டுப்
பீடோங்கும் சிரஞ்சீவிக் கணமும் சித்தர்
   பெருக்கமும்மாய்ந் தனகொல்எனப் பெரிதும் நொந்தேன்
ஆடோடு மயில்உகைப்பான் கலைஒன் றீந்தால்
   அசுகொடுல குயற்காமா றனந்தம் செய்வேன்
மாடோடு மதமலைஊர்ந் தாமாத் தூரில்
   மரகதங் கலையொடமர் வாழ்க்கை யானே. (4)

## ஆசிரியப்பா

யாதுகா ரணத்தோ இகதலம் முழுதும்
தீதுறப் பசுக்கொலைச் சிதடர் ஆளும்
புன்னாள் எனக்கிப் புத்துடல் கிடைத்தது;
இன்னா அளவற எய்தி இனமா
மனிதர் யாரும் மாமிசம் அருந்தாப்
புனித மெய்தப் புரிதல்வேட் டுழைத்து
வேதியர் தாமும் வேள்விக் கொலையே
மீதிபல் நலமென விழைதல்கண் டிளைத்துப்

பலபல தலந்தொறும் பாடிப் பணிந்தும்
குலவருள் எய்தாக் கொடுமையிற் குலைந்து
நான்மறைக் குயிராம் நலம்திகழ் பசுக்கள்
வான்மருப் பெய்தி மகிழ்ந்தஆ மாத்தூர்
தஞ்சம்என் றடைந்து தவஞ்சிறி தியற்றி
வஞ்சவன் கலியன் மதன்முதற் சிலரால்
அவரும் எய்தி ஆண்டநா யகப்பெயர்ச்
சிவனருள் துணைஎனத் தேறிச் சிற்சில
அநுபவ முறையால் அருந்தமிழ்க் கவிகள்
எனுமிரண் டாயிரம் இயற்றி இப்பால்
சதகப் பதிகம் சாற்றத் துணிந்தேன்;
அதன துட்குறிப் பறிகிலன் அந்நாட்
சதுரரிற் சேர்த்துத் தனிக்கதி தருமோ?
பதுமன் இன்னம் படைக்கவிட் டிடுமோ?
எங்ஙனம் யாண்டெது செயினும்
அங்ஙன மேயாம் அகற்றிடல் அகதே. (5)

பாயிரம் முற்றிற்று
தெய்வமே துணை.

## 1. (எழுசீர் சந்த விருத்தம்)

1. சரதம் ஆக நானு னாது
   தாள்க ளைக்கு றித்துளேன்;
விரத பங்கம் வந்தி டாது
   வேண்டி என்னை ஆட்கொள்வாய்
அரத னங்கொள் ஆட ராஅ
   ணிந்து மாதை யின்கண்ஓர்
சுரத மங்கை யோடு வாழ்சு
   தந்த ரச்சு ரேசனே!

2. இந்து சூடி ஏழை யோடொர்
   ஏற்றில் ஏறி என்கண்முன்
வந்து நீற ளிக்கில் உன்னை
   வான்உ ளார்ப ழிப்பரோ?
ஐந்து மாமு கங்கொ டென்றும்
   ஆசின் மாதை யின்கண்வாழ்
முந்து தேசி கா!பல் கோடி
   முத்தர் பேணும் மூர்த்தியே!

3. உன்னை யேபொ ருட்ப டுத்தி
உன்னு கின்ற தன்மையேன்
தன்னை நீவெ றுக்கில் இச்ச
கத்தில் யாவர் உய்வரோ?
பொன்னை மார்பில் வைத்த வன்பு
கழ்ந்தி றைஞ்ச மாதையில்
பின்னை மற்றொர் ஈடி லாத
பெருமை கொண்ட பித்தனே.

4. ஆணு டன்பெணாகி எண்ணில்
அண்ட பிண்டம் ஆனநிற்
காணு மாற வாவு நான்க
லக்கம் எய்தல் ஆகுமோ?
மாணு றும்பல் அன்பர் வாழும்
மாதை யூரில் வந்தடி
பேணு வார்த மக்கி ரங்கு
பெற்றி யுற்ற பெரியனே!

5. பின்னம் அற்ற யோக மும்பி
றப்ப றுக்கும் ஞானமும்
தன்ன தன்பர் எய்த நல்கு
சங்க ரா!ச தாசிவா!
உன்ன தாய மாதை யின்கண்
உற்று னைப்பு கழ்ந்துளேன்
என்ன தாண வப்பெ ருகிடு
இரிந்தி டச்செய் இற்றையே!

6. ஈன மானி டர்த்தொ டர்ந்து
   இறைஞ்சி இச்சகஞ் சொல்வார்
ஆன பாவ லர்க்கு நானுள் அஞ்சி
   ஒஞ்சல் ஆகுமோ?
பானல் வாவி மாதை யம்ப
   திக்கண் உற்ற பாரமா!
ஞான மோடு சித்தி எட்டும்
   நல்க வல்ல நாதனே!

7. கஞ்ச நாண்ம லர்க்கண் வைகு
   கான வேத நூல்கொள்வார்
தஞ்ச மான ஆனி னம்த
   யங்கல் என்று தீர்ப்பையோ?
பஞ்ச பூத முங்க கடந்த
   பாங்கு டைப்ப ராபரா!
நஞ்ச ருந்தி உய்ந்த வா!நன்
   மாதை யூரின் நண்பனே!

8. மாரன் ஏவும் வாளி யால்வ
   ருந்து கின்ற வம்பனேற்கு
ஈரம் மிக்க தொண்டர் எய்தும்
   இன்பம் நல்க வல்லையோ?
பார்அணங்கின் ஆன னப்
   பரப்ப தன்ன மாதையில்
கார்அ னங்கொர் பாதி யிற்க
   லந்து றுங்க பாலியே.

9. முன்னம் நின்கு மாரன் வாய்மொ
ழிந்த சொற்கள் முற்றுறாது
இன்ன லுற்று ளேனை நீஇ
ரங்கி யாளல் ஈனமோ?
கன்னல் வில்லி யைப்பொ டித்த
ளித்த காரணா! கறைப்
பன்ன கம்பு னைந்து மாதை
யிற்கு லாவு பரமனே!

10. நீசர் புன்கு டைக்குள் நின்று
நெட்டு யிர்த்தி ரங்கெனக்
காச கன்ற ஞான சித்தி
அருள வல்லை யல்லையோ?
வாச வன்றன் என்ப ணிந்து
மாதை யிற்கு லாவுமெய்த்
தேச னே!அ கோர வீர
சிம்புள் ஆய சித்தனே!

## 2. கலித்துறை

1. ஆராதனை செய்பவர் வேட்கைஅ னைத்தும் நல்குஞ்
சீர்ஆர்தரு நீஎனை யெள்ளித்தி யங்கச் செய்யேல்-
கார்ஆர்களத் தாய்!திரு மாதையின் காவல் செய்யும்
பேராண்மைஉள் ளாய்!பசு வர்க்கம்பெ ருக்கு வானே!

2. மெய்போல்பல பொய்மொழி பேசிடும் வீணர் தம்பால்
செய்போர்தவிர்த் துன்னடி யாரிடைச் சேரச் சேர்ப்பாய்
மைபோல்கறுக் கும்களத் தாய்! திரு மாதை யூரின்
ஐபோல்திகழ் தேசிக னே!முழு தாண்டு ளானே!

3. கனக்கும்செயல் ஆயிரங் கோடிமுன் காட்டு நீதான்
எனக்கென்றொரு சீர்விளை யாடல்இ யற்றொண் ணாதோ?
வனக்குங்குமக் கொங்கைநல் லாளொடு மாதை யூரில்
சினக்குங்கவின் மால்விடை யேறித்தி கழ்ந்த தேவே!

4. பொய்வீடது வேபொரு ளென்றுபு லர்ந்து ளார்தாம்
மெய்வீட்டின ரைப்பழிக் கும்பிழை மீற லாமோ?
கைவீணைவல் லாய்!கவின் மாதையின் காவல் செய்வாய்!
தெய்வீகம்மி கப்பெறு பற்பல சீர்த்தி யானே!

5. படைவேல்விழி யார்தரும் மாயையில் பட்டு மாய்ந்து
கடையாய்உழல் வேன்உயு மாறுக டாட்சிப் பாயோ
சடைமேற்பிறைக் கீற்றமைத் தாய்விணில் தாவு தூவெள்
விடையாய்வியன் மாதையின் கோயிலுண் மேவு தேவே!

6. அலைநீர்உடுக் கும்புவி மங்கைஅு ழாத வாறே
புலைவேரறுக் கின்றவன் தோன்றப்பு ரிந்தி டாயோ?
சிலைஆலடி யிற்குல வுந்திருத் தேசி காநல்
நிலையோர்தொழ மாதையின் கோயில் நின்று ளானே.

7. கன்றைப்பசு துன்புறக் கொன்றுணும் கைப்பொ லார்தாம்
இன்றைக்கழி யச்செயிக் கின்றவர் இல்லை யேயோ?
குன்றைச்சிலை யாம்எனக் கொண்டுமுன் கோல் வல்லாய்
கொன்றைச்சடை யாய்வள மாதையின் கோயி லானே!

8. தொல்லைக்கொடுந் தீவினை யின்பயன் துய்த்து ளேனைக்
குல்லைத்தொடைச் சேயெனப் பார்சொலக் கூட்டு வாயோ
கல்லைப்பொரு சிந்தையுள் ளார்விழி காணொ னானா
நெல்லைத்தரும் வார்வயன் மாதையில் நீடு வானே!

9. நிசமாகமம் போற்றிய ஆனினம் நெஞ்சம் நோவா
சுகம்ஆர்அதர் நாடிநை கின்றதும் தோட மேயோ?
ககமாஒரு சீயம்அட் டாடுகங் காள நாதா!
நகமாதொடு மாதையின் மேவிய நன்மை யானே!

10. கொம்பானினம் அன்றுற நீகொடுத் திட்ட துண்டேல்
அம்பாரில்இந் நாள்கொல்கின் றாரைச்செய் தாள்வ தாரோ?
செம்பால்நிறை யுங்கைக்க பாலச்சி வாதென் மாதை
நம்பா!நம னார்க்கெம னாநிகழ் ஞாயத் தானே!

## ३. கலித்துறை

1. கழக நாவலர்க் கரியபா வனைதரு கல்விக்
கிழவர் போற்றுமா மாதையில் சந்தம் கிளர்பேர்
அழக னார்எனை ஆண்டுகொண் டருள்செய ரானால்
பழம றைக்குலம் முழுமையும் கடிதுபாழ் படுமே.

2. ஐய மாதையில் ஆண்டநா யகன்றிரு வருளால்
வையம் வானொடு வாழ்வுற கருதும்என் மனத்தும்
வெய்ய வேள்கணை பொழிவதுண் டென்னில்வே றெவரை
உய்ய விங்குவிட் டிடுவனோ அறிகிலன் உலகே

3. மனம றிந்தபா தகங்களும் சிலசெயும் வஞ்சத்து
எனது பாடலும் அணிந்துகொண் டருள் வழங் கிடுமோ?
தனத னார்உற வாதிய சாற்றுநர் தமக்கும்
கனம்வ ழங்குபு மாதைவாழ் கடவுள்நா யகமே!

4. ஏழு கோடிமா மந்திரப் பகுதியும் இருக்கப்
பாழும் வேள்வியல் கொன்றுண விதித்தார்? பகராய்;
தாழும் வார்சடைத் தம்பிரா னே!தமிழ் மாதை
வாழும் நாயக னே!மணி கண்டவா னவனே.

5. அரக்கும் கள்ளுமுண் டார்ப்பவர் அரசரா லினால்
பரக்கும் மாநிலம் படுந்துயர் சகித்திடற் பாற்றோ?
குரக்கு வான்படைக் கொற்றமால் பணிகொள்ளும் மாதை
இரக்கு நாயக னேயிமை யார்தொழும் இறையே!

6. கரண வாதனை முழுதறக் களைந்தொருக் காலும்
மரண மும்பிற வியுந்தொட ராதருள் வழங்காய்-
அரணம் நான்குறும் மாதையம் பதியினில் அரவா
பரணம் ஆதிய புனைந்துறும் பழையபண் ணவனே!

7. திட்டு சொற்குரி யார்திடுக் குறத்திரு வருள்ஓர்
எட்டு ணைத்தனை யேனும்எற் குதவுநாள் என்றோ?
மட்டு வார்சடை மேற்பிறைக் கீற்றணி வானாக்
கொட்டு பூம்பொழின் மாதையில் குலவுகொற் றவனே!

8. இன்னம் என்னைநீ சோதனை செய்திட எண்ணேல்;
முன்னம் ஓதிய மொழிப்படி நடத்திமுன் நிற்பாய்
அன்ன வாகனத் தயன்தொழு துய்யும்மா மாதை
மன்ன வா!மழ மால்விடை உகைக்கும்வா னவனே!

9. கனகம் ஆதிய ஏடணை யிற்கலக் குறுநான்
அனக மாதவப் பயன்பெறக் கருதனமுற் றாதோ?
பனக பூடணம் அணிந்தெழில் மாதையம் பதியில்
சனகன் ஆதியா போற்றிட க் குலவுசற் குருவே!

10. நல்ல மானிடர்த் தொடர்இடர் கெடமுயல் நானும்
அல்லல் வாதனைப் படவிடல் அறம்கொலோ அறையாய்;
மல்லல் மாதையம் பதிப்பெரும் கோயிலுள் வைகிப்
பல்லஞ் சொரிவார்க்கும் வேட்பன் அருள் பரனே

## 4. கட்டளைக் கலிவிருத்தம்

1. அளகை யாதிபன் ஆதியர் கண்டுகண்டு
உளமொல் கத்தகும் நகைஎற் கீவையோ
வளம் அறாப்பொழின் மாதை வரோதயா
களவில் சீருடைக் கண்ணுதல் தெய்வமே!

2. சங்கை இன்றித் தராதவர் பாலும்உற்று
அங்கை ஏற்றலை யாதெனை யாட்கொள்வாய்-
மங்கை மார்நடம் ஆடுநல் மாதையில்
கங்கைசூடு கவின் சடைத் தாரனே!

3. சத்தியம் தவறும் கொடுந்தன்மை கண்டு
எய்த்தி றைஞ்சும் எனக்கிரங் காய்கொலோ!
சித்தி எட்டும் திரும்பரி தாயமெய்ம்
முத்தி யும்தரும் மாதைமுக் கண்ணனே.

4. வகுள மாரன்கை வாளியி னால்துயர்
வெகுவி தாம்கொடு வெம்பும்எற் கைவிடேல்-
தொகுத வத்தினர் தொண்டுசெய் மாதையில்
தகுவி னோதம் மிகப்புரி தாணுவே.

5. கஞ்ச நான்முகன் கைபடை யாமல்நின்
செஞ்ச ரண்தமி யேன்சிரம் சூட்டுவாய்-
சஞ்ச லந்தவிர்க் குஞ்சிவ சங்கரா!
மஞ்ச றாப்பொழின் மாதையில் வாசனே!

6. என்ன தாம்செயல் யாதும்இல் லாமையோர்ந்து
இன்ன முந்துயர் எய்துகின் றேன்ஐயோ!
கன்னல் வார்வயல் சூழ்கவின் மாதைவாழ்
முன்ன வா!முழு தாய்எண் மூர்த்தியே.

7. தீர்க்க யோசனை இன்றித் தியங்கும்என்
மூர்க்க வெம்பகை முற்றொழித் தாட்கொள்வாய்-
நீர்க்க வின்சடை யாய்நெடு மாதைஆம்
ஊர்க்கண் மேவும் ஒருபெருந் தெய்வமே.

8. ஊன்அு ருந்திடற் கொல்குகில் லார்எலாம்
ஈனம் எய்திட வெல்பவன் யாவனோ?
மான மாதை வளம்பதி யில்சிவ
ஞான யோக நலம்தரு நாதனே!

9. முன்த மிழ்த்துதி பாடு முனிவரோடு
என்ற னைப்புவி சொற்றிடல் எற்றையோ?
மன்ற னேகமுள் ளாய்வள மாதையில்
நின்ற வாமுழு நீறணி நித்தனே!

10. நெல்லும் பொன்னும் நெடும்குழல் மாதரும்
சொல்லுக் கீந்தநின் தொல்குணம் இல்லையோ?
செல்லு லாம்பொழில் மாதையில் சித்தனா
அல்லு டன்பக லுந்தவிர் ஆதியோ!

## 5. சந்தக் கலிவிருத்தம்

1. மின்னும்சடை முடிமீதிடும் விதுவெண்பிறை நீங்காப்
பொன்னும்நதுவ ரும்போல்விடைப் புறமேறிமுன் வந்தாள்-
பன்னும்சது மறைஆதிய பலநூல்வகை பகர்சீர்
மன்னும்சிவ னே!நல்அருள் வளமாதைஉ ளானே!

2. உடலிற்பிணி மனவாதனை யொடுதீரநலம் உன்னித்
திடம்மிக்குயர் பணிசெய்துறு சிறியேற்கரு ளாயோ?
நடமிட்டருள் வானேபல நல்வார்மகிழ் மாதை
கடவுட்பெரு மானேசிவ கணநாகர்பி ரானே!

3. வெங்குற்றம்அ னேகம்செயும் வெகுதானவர் உவகை
பொங்குற்றிட வுஞ்செய்யும்நின் புகழோதெனை இகழேல்
கங்குல்புரை கண்டாமிகு கவின்ஆர் தரும் மாதை
தங்குற்றபி ரானேஆணி தவளப்பொடி யோனே.

4. அமிழ்துண்பவர் வாழ்வும்பொருள் அன்றேஎன நின்றும்
இமிழ்தண்கடல் சூழ்பார்நசை எனைத்தொடல் ஏனோ
தமிழ்விஞ்சிய மாதைப்பதி தனில்வாழ்சிவ சம்போ!
உமிழ்வெங்கடு வஞ்சாதுபல் உரகம்புனை வோனே .

5. சிவசங்கர சம்போஎனச் செப்பாதவ ரேபோல்
பவசங்கடம் எய்தாதெனைப் பாலித்தருள் கூர்வாய்-
கவசம்கவின் நீறாகிய கனன்மேனிய னேமெய்த்
தவசங்கர்எந் நாளுந்திகழ் தருமாதையு ளானே!

6. உன்அன்புறு பசுமுற்றும்இ வுலகத்துயக் காண்கை
இன்னம்பிற வாமுத்தியில்இனி தென்றணல் பிழையோ?
தன்னந்தனி யாய்ப்பற்பல சத்கோடியும் ஆகி
அன்னம்பயில் வயன்மாதை யில்அமரும்பெரு மானே.

7. தண்டாயுதத் தொடுசூலமும் தாங்கும்காத் தெமனை
ஒண்தாள்கொடு செற்றாய்பினும் உய்யச்செயல் ஏனோ?
வண்டார்பொழின் மாதைபதி வாழ்வாம்முதல் வள்ளால்
அண்டார்புரம் மூன்றும்சுடும் அழலார்நகை யானே!

8. தேனைப்புரைத் தமிழ்நாவலர் சிலருக்கருள் செயும்நீ
ஏனைச்சிறி யவர்தம்முடன் என்னைக்கைவி டாதே
யானைப்பசும் தோல்போர்த்தினி தாமாதையில் அமர்வாய்
வானைத்திரு நடம்ஆடிடு மன்றாஉடை யானே!

9. உலகத்தொரு சிலர்என்றனை உன்னித்தொ ழுமாறே
பலர்நன்கும திக்கத்தகு பரிசென்றருள் வாயோ?
கலகச்சமன் மதன்நான்முகன் கருதத்தரும் வலியாய்!
அலகற்றபு கழ்ச்சீர்உறும் ஆமாதை உளானே.

10. அஞ்சத்தகு சிறியோர்களும் ஆர்த்திட்டெதிர் நின்று
மிஞ்சத்தளர் வேன்நின்அருள் விறல்என்றடை வேமோ?
மஞ்சத்தனை யும்காமுறு மாதைப்பதி மேவி
செஞ்சக்கர மால்பற்பலர் தினமும்பணி தேவே!

## 6. கலிவிருத்தம்

1. வந்தனைத் தமிழ்கொடு மாதை வாழ்சிவன்
சிந்தனை யாம்தவம் சிறிதும் செய்திடார்
கந்தனைப் போல்அருட் கடலிற் றோய்வரோ?
நிந்தனைக் கனலிடை நெடிது சேர்வரே.

2. வான்புனற் பம்பைசூழ் மாதை மாநகர்க்
கோன்புகழ் சிறிதிங்ன் கூறப் பெற்றுள
நான்புவி அறியமெய் ஞான வாழ்வுறில்
தான்புல வோர்பெருந் தயக்கம் தீருமே.

3. மந்திர யோகியர் பலரும் வாடுறத்
தந்திர வாதர்கள் தழைவதென் கொலோ?
வந்திர வியுந்தொழு மாதை மாநகர்ச்
சந்திர சேகரச் சடில் நாதனே!

4. முன்னையோர் மொழிவழி மொழிந்து போற்றும்என்
றன்னைநீ யாட்கொளில் தகுதி குன்றுமோ
தென்னையும் பூகமும் செறியும் மாதையின்
மின்னைநேர் உமையொடு விளங்கும் மெய்யனே!

5. பொன்அவா வினர்எனப் புலரும் நாயினேற்கு
உன்னருள் கடல்துளி ஒன்று நல்குவாய்-
பன்னரும் வளம்பல படரும் மாதையில்
அன்னவா கனன்தொழ அமரும் ஐயனே.

6. சூதைநேர் முலையினர் தொடர்ச்சி யால்அயர்
பேதையேற் குனதருட் பேறும் எய்துமோ
காதையா யிரம்பல கவிஞர் கூறிடும்
மாதைமா நகர்நடு வாழும் வள்ளலே!

7. ஈனவெங் கலியினால் இளைக்கும் என்றனை
ஞானவா ரிதியதன் நடுவில் தோய்ப்பையோ
பானல்நோ விழிச்சிவை பாக னேஎன
மானமா தையிற்றினம் வசிக்கும் வாசனே!

8. மண்டலத் துன்அருள் வளமை தோய்ந்தமெய்த்
தொண்டர்வந் திடச்செயில் தோடம் ஆங்கொலோ?
புண்டரீ கத்தடம் பொலியும் மாதையில்
கண்டவர் வினைஅறக் களைகங் காளனே!

9. நீற்றினை யிகழ்தரு நீசர் ஆணவம்
மாற்றிட வல்லவன் வருவ தெற்றையோ?
கூற்றினைச் செகுத்தவா! குளிரும் மாதையிற்
வீற்றிருந் தருள்செயும் விமல மூர்த்தியே

10. வெங்கரா அனையவல் வினையை வீட்டிவில்
துங்கரா கவன்நிகர் தோற்றம் ஈவையோ?
சங்கரா! விடைப்பரித் தலைவ! மாதையில்
பொங்கரா அணிந்தமர் புனித நாதனே!

## 7. கலிச்சந்த விருத்தம்

1. அந்தோ ஒருசற் றருள்செய் தடியேன்
சந்தோட் டமுறும் படித்தாங் குவையோ?
நந்தேர் இடுமாதை நகர்க் கதிபா?
திந்தோம் எனஆ டியசிற் சிவனே!

2. அடல்கூர் மறலிக் குளம்அஞ் சிடும்நாள்
திடமா தவமெய் திடுசீர் அருள்வாய்
மடமான் அனையா ளொடுமா தையில்முச்
சுடர்ஆம் விழிகொண் டுறைதூ யவனே!

3. உன்எண் ணமொர்சற் றும்உணர்ந் திலனாம்
என்எண் ணம்முடித் திடஎன் றருள்வாய்?
பொன்எண் ணவிளங் கியபொற் புமையாம்
மின்எண் ணநன்மா தையின்மே யவனே!

4. என்பா டல்இரட் டையர்பா டலைநேர்
இன்பா டல்எனக் கொளில்ஈ னமதோ?
தென்பா டல்மிகும் திருமா தையின்வாய்
வன்பா டரவும் புனைவா னவனே!

5. தேம்பித் தமியேன் துதிசெய் கவிகள்
பாம்பிற் கொடிதென் றெளில்பா வமன்றோ
வேம்பித் தனென்றார்க் குமெய்வீ டளித்தாய்!
ஓம்பித் தமிழ்மா தையிலுற் றவமே!

6. ஆறா றும்அலா ததுவே அடியேன்
பேறா கிடநல் குபுபே ணுவையோ?
சீறா டரவும் புனைவாய் தெளிநீர்
வீறார் தருமா தையில்விப் பிரனே!

7. முன்னம் பிழைசெய் தமைமுற் றவிடாது
இன்னஞ் செயவும் கருதென் னைஎளேல்;
வன்னஞ் சயில்வாய்! வளமா தையில்வாழ்
பொன்னஞ் சிலையேந் துகைப்புங் கவனே!

8. அரியா தியரார் வமுறத் தகுநீர்க்கு
உரியா ருடன்என் னையும்உயித் தருள்வாய்;
வரியார் அரவம் புனைவார் சிலைக்கைப்
பெரியாய்! திருமா தையில்வாழ் சிவனே!

9. சொல்லும் கவியூ டுநின்சொல் அருட்சீர்
புல்லுந் திறமோர்ந் தும்புழங் குவனோ?
அல்லும் பகலும் தவிரா தியப்பா
மல்லுந் தெழில்மா தையில்வாழ் சிவனே.

10. வண்ணக் கவிபா டவலாய் எனமுன்
நண்ணிப் பலகால் நவில வரும்என்
எண்ணப் படியென் றருள் ஈகுவையோ
தண்ணம் பொழின்மா தையின்சங் கரனே

## 8. சந்தக் கலிவிருத்தம்

1. கையின்மழு வுடையாய் காதில்வளை யிடுவாய்
மெய்யிற்பெரி யானாவியன் மாதையின் மேயோய்
பொய்யின்றி பேறேபோ தக்கரு தென்னை
வெய்யிற்புழு வேபோல வெதும்பச்செய வொண்ணாதே.

2. வித்தாரக விச்சீர் விண்டார்பலர் தாமும்
செத்தார்அவ ருடனியான் சேரும்படி செய்யேல்
முத்தாம்பிகை பாகா மூவாப்புகழ் மாதை
அத்தா!அரு ளாளா அடியார்க்கெளி யானே.

3. சாக்காடொடு பிறப்பும் தவிர்க்கின்றமெய் முத்தி
வாக்கால்அரு ளிடவும் வல்லாய்எனை எள்ளேல்
சேக்காணுறு கொடியாய்! திருவீழியில்! இருவா!
பாக்காசருள் வள்ளால்! பழமாதையு ளானே!

4. தெண்ணீர்மைய ரேபோல் சிலவாசகம் சொல்வேன்
கண்ணீர்சொரிந் துருகிக் கருதேனெனைக் கழியேல்-
தண்ணீர்சடை நம்பா! தமிழ்மாதையில் தலைவா
பெண்ணீர்மையொர் பாலில் பிறங்கும்பெரு மானே.

5. தீங்கும்சில நன்றும் சேரப்பெறல் வேட்டிங்கு
ஏங்குந்தமி யேனுக் கிரங்காதிருக் காதே
கோங்கும்செருந் தியும்பொற் கொன்றைமுத லியவும்
ஓங்குந்திரு வாமாத்தூர் வாழ்உர வோனே.

6. முன்வாய்மையில் சீர்த்தோர் வளமிழந்துதி பூண்டும்
எமன்வாய்க்கவி களும்நீ ஏற்கின்றமை என்றே?
மன்வாழ்வையும் மதியா மனத்தார்உணர் வள்ளால்
பொன்வாழ்வுறு மாதைப் புனிதப்பெரு மானே.

7. பொருவாவினை வலியால் புண்பட்டுழல் வேண்முன்
குருவாய்இனி ஓர்கால் குலவற்கிசை வாயோ
மருவார்தரு கொன்றை மலர்மாலிகை புனைவாய்!
திருவாமாத் தூரில் தினம்வாழ்வுறு சிவனே

8. செங்கண்டிரு நெடுமால் சிகையோன்முதல் தேவர்
தங்கட்கினி யவன்ஆம் தவம்யாதுகொல்? சாற்றாய்
வெங்கண்கொடும் பேய்கள் விரும்பாடலும் செய்வாய்!
அங்கண்புவி முகம்தேர் ஆமாதைஉ ளானே!

9. தாமேமுதல் என்று தருக்கும் சிறி யவரைத்
தீமேல்விழு புழுபோல் இயங்கச்செய் வேனோ?
கோமேதமும் செய்யும்கொ டியோர்உணர் வரியாய்!
மேயத்தரு பொழில்சூழ் ஆமாதைப்பதி யானே!

10. கண்டத்தொட கண்டம் கருதித்தொழு துருகும்
தொண்டர்க்கடி யாரைத் தொழும் வாழ்வெளி தேயோ
சண்டற்கெமன் ஆகிச்சர ணால்வதைத் தாண்டாய்
அண்டர்க்குறு கதிஆம் ஆமாதையம் மானே!

## ௯. பலவகைக் கலிவிருத்தங்கள்

### (வேறு)

1. சூதைப் பொருமுலை தோகையர் ஆதிய
வேதைக் கொடுமனத் திராப்பகல் விளைதரு
வாதைக் கொருபெரு மருந்தென மதித்து
மாதைப் பிரான்அடி வாழ்த்துகின் றோமே.

2. அஞ்சனக் கண்டனை ஆமாத் தூரினில்
செஞ்சரண் போற்றிச் சிறப்புறத் தக்கோர்
கஞ்சனை வெண்பால் கடல்துயில் வானைத்
தஞ்சம்என் றெண்ணித் தயங்கு கிலாரே.

3. ஆமாத் தூர்வளர் அந்தணன் அன்றி
ஏமாப் புறுபரம் இன்றெனத் தெளியார்
தாமாத் தேறிச் சாற்றுவ பலவும்
மாமாப் போலும் மதப்பெரும் உறே

4. எச்சம யத்தியாண்டு யாரெஙன் ஓதினும்
அச்சம யத்தாங் கவிர்த ரும்பலன்
பொச்சம் இல்முனிவோர் போற்றிப் பணிய
நிச்சலும் மாதையில் நீடுகின் றானை.

5. ஆனினம் தொழும்அன் தணிமருப் பமைத்தோன்
